சங்க உறுப்பினர்களுக்கு மட்டும்

# கொழும்புத் தமிழ்ச் சங்கம்

# செய்தி மடல்

வெளியீடு : 02

மாதம் : கார்த்திகை

கொழும்புத் தமிழ்ச் சங்க இணையத்தளத்தில் **'எம்மைப் பற்றி'** எனும் பகுதியிலுள்ள **"செய்தி மடல்"** பிரசுர வடிவம் இம்மடலாகும். மேலும் விபரங்களுக்கு எமது இணையத்தளத்திற்கு விஜயம் செய்யுங்கள்.

இணையத்தளம்:www.colombotamilsangam.com மின்னஞ்சல்: tamilsangamcolombo@yahoo.com
info@colombotamilsangam.com
தொலைபேசி இல : 2363759
தொலைநகல்: 2361381

## நடைபெறவிருக்கும் நிகழ்வுகள்

**வாக்கேயகாரர் வரிசையில் "கோபாலகிருஷ்ண பாரதி"** நிகழ்வு எதிர்வரும் 08.01.2010 அன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6.00 மணிக்கு நடைபெறும்.

**பண்ணிசை கலா வித்தகர் இசைக்கலைமாணி**
செல்வி சஜீவி இராசையா

**பக்க வாத்தியங்கள்**

**வயலின்**
திருமதி சுவர்ணாங்கி சுகர்தன்,

**மிருதங்கம்**
திரு.க.சுவாமிநாதன் சர்மா.

கொழும்புத் தமிழ்ச் சங்கத்துடன் அகில இலங்கை இந்து மாமன்றம் திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணிச்சபை ஆகிய நிறுவனங்கள் இணைந்து நடாத்தும் வானொலி மாமா, மூத்த சிவத்தொண்டர் அமரர் ச.சரவணமுத்து அவர்களின் நினைவுப்பரவல்

இடம் : கொழும்புத் தமிழ்ச் சங்கம் சங்கரப்பிள்ளை மண்டபம்
காலம் : 23.12.2009 புதன்கிழமை மாலை 5.30 மணி
தலைமை : பேராசிரியர் சபா ஜெயராசா
(துணைத் தலைவர், கொ.தமிழ்ச் சங்கம்)

**தொடர்ந்து நினைவுரைகள், நன்றியுரை தமிழ் வாழ்த்து என்பன இடம்பெறும்.**

## திருக்குறள் போட்டி

அகில இலங்கை திருக்குறள் போட்டி 2010ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் நடைபெறவுள்ளது. சகல மகாணங்களிலும் போட்டி நடத்தப்பட்டு 2010ஆம் ஆண்டு மே மாதம் அளவில் திருக்குறள் மாநாடு, திருக்குறள் மலர் வெளியீடு என்பன நடைபெறும்.

**முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தரின் "யாழ்நூல்"** பற்றிய ஆய்வு 2010ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நடைபெறும்.

தமிழ், இசை, பௌதீகவியல் பேராசிரியர்களால் ஆய்வுகள் மேற்கொள்ளப்படும். இந்த ஆய்வு ஒரு நாள் நடைபெறும். கொழும்பு மாவட்ட பாடசாலை களுக்கிடையிலான விவாத போட்டி ஒன்று நடத்தப்பட்டு கேடயங்களும் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் முன்னாள் தலைவர்
# அமரர் திரு.செ.குணரத்தினம்
## அவர்களுக்கான அஞ்சலி



திரு.செ.குணரத்தினம் அவர்கள் தனது 55ஆவது அகவையில் 07.11.2009 அன்று கொழும்பில் காலமானார். அன்னாரது மறைவையொட்டி கொழும்புத் தமிழ்ச் சங்கம் தனது ஆழ்ந்த அனுதாபங்களையும் அஞ்சலியையும் தெரிவித்துக் கொள்கின்றது. அமரர் செ.குணரத்தினம் 1990ஆம் ஆண்டு முதல் 1997ஆம் ஆண்டு வரை எட்டு ஆண்டுகள் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் தலைவராக இருந்து அதனை நல்வழியில் நெறிப்படுத்தியவர். 1987ஆம் ஆண்டு முதல் சங்கத்தின் ஆயுட்கால உறுப்பினராக இருந்து வந்தவராவர். 1988 - 1990 ஆண்டுகளும் பின்னர் 1998 - 1999 காலத்திலும் சங்கத்தின் துணைத் தலைவராகவும் இருந்தவர்.

இலங்கை நிர்வாக சேவையில் பணியாற்றிய புலமைசார் தமிழ் அறிஞர் என்று பலராலும் போற்றப்படும் தகுதி பெற்ற சான்றோராக செ.குணரத்தினம் விளங்கினார். இவர் ஒரு கவிஞராகவும், எழுத்தாளராகவும் அறியப்பட்டிருந்தார். தமிழ்ச் சங்கத்தின் தலைவராக இருக்கும்போது "பொன்விழாப் போற்றிசை" என்னும் நூலால் சங்கத்தின் ஐம்பது வருட வரலாற்றை கவிதையில் வெளியிட்டவர். இவர் ஆற்றிய அளப்பரிய சேவையை கொழும்புத் தமிழ்ச் சங்கம் நன்றியுடன் நினைவு கூருகிறது. அவரின் மறைவையொட்டி துயருறும் அவரது குடும்பத்தினருக்கும் உற்றார் உறவினருக்கும் ஆழ்ந்த அனுதாபத்தை கொழும்புத் தமிழ்ச் சங்கத்தினர் தெரிவித்துக் கொள்கின்றனர்.

---

## நிகழ்வுகள்

### சென்ற மாதம் நடைபெற்ற சங்க நிகழ்வுகள்

**இலக்கியக் களம் - நிகழ்வு 03**

06-11-2009 வெள்ளிக்கிழமை கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகக்குழுச் செலயாளர் வைத்திய கலாநிதி தி.ஞானசேகரன் அவர்களின் தலைமையில் **"வாழ்க்கையில் வெற்றிபெற வழிகள்"** என்னும் தலைப்பில் பட்டயக்கணக்காய்வாளரும் வரி ஆலோசகருமான திரு.எஸ்.ஆர்.பாலச்சந்திரன் அவர்களின் உரை இடம்பெற்றது.

**நூலகம் (சிறுவர் பகுதி)**

07-11-2009 காலை 10.00 மணிக்கு திருமதி பூரணம் ஏனாதிநாதன் அவர்களால் **"கதை கதையாம் காரியமாம்"** என்ற தலைப்பில் சிறுவர்களுக்கான கதை சொல்லும் நிகழ்வு நடைபெற்றது.



**அறிவோர் ஒன்று கூடல்**

11-11-2009 புதன்கிழமை கொழும்புத் தமிழ்ச் சங்கப் பதிப்புத்துறைச் செயலாளர் திரு.க.இரகுபரன் அவர்களின் தலைமையில் **"சிவில் சமூக அமைப்புகளின் அவசியமும் செயற்பாடுகளும்"** என்ற தலைப்பில் திருமதி. சாந்தி சச்சிதானந்தம் அவர்கள் உரையாற்றினார்.

**இலக்கியக்களம் - நிகழ்வு 04**

13-11-2009 வெள்ளிக்கிழமை கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் பேராசிரியர் சோ.சந்திரசேகரன் அவர்களின் தலைமையில் **"ஸ்ரீபன் கோவி - வாழ்க்கையில் வெற்றிபெற்றோரின் ஏழு பழக்கங்கள்"** என்ற தலைப்பில் திறந்த பல்கலைக்கழகம் இலங்கையின் சிரேஷ்ட விரிவுரையாளர் திரு.ரி.தனராஜ் உரையாற்றினார்.

**நூலகம் (சிறுவர் பகுதி)**

14-11-2009 காலை 10.00 மணிக்கு செல்வி சுஜாதா குலேந்திரன் அவர்களால் **"கதை கதையாம் காரியமாம்"** என்ற தலைப்பில் சிறுவர்களுக்கான கதை சொல்லும் நிகழ்வு நடைபெற்றது.

**நூலகம் (சிறுவர் பகுதி)**

21-11-2009 காலை 10.00 மணிக்கு திருமதி சந்திரபாவனி பரமசாமி அவர்களால் **"கதைகதையாம் காரியமாம்"** என்ற தலைப்பில் சிறுவர்களுக்கான கதை சொல்லும் நிகழ்வு நடைபெற்றது.

**இலக்கியக்களம் - நிகழ்வு 05**

27-11-2009 வெள்ளிக்கிழமை கொழும்புத் தமிழ்ச் சங்கத் துணைத் தலைவர் திருமதி.பத்மா சோமகாந்தன் அவர்களின் தலைமையில் **"பரதக் கலை"** என்ற தலைப்பில் செல்வி ஆரணி ஸ்ரீநிவாசன் உரையாற்றினார்.

**நூலகம் (சிறுவர் பகுதி)**

28-11-2009 காலை 10.00 மணிக்கு திருமதி நளினி இராஜசேகர் அவர்களால் **"கதை கதையாம் காரியமாம்"** என்ற தலைப்பில் சிறுவர்களுக்கான கதை சொல்லும் நிகழ்வு நடைபெற்றது.

**ஆரோக்கிய வாழ்வுக்கான கலந்துரையாடல்**

29-11-2009 கொழும்புத் தமிழ்ச் சங்கச் சமூக மேம்பாட்டு குழுச் செயலாளர் திரு.த.சிவஞானரஞ்சன் அவர்களின் தலைமையில் ஆரோக்கிய வாழ்வுக்கான கலந்துரையாடலில், வைத்திய கலாநிதிகள் எஸ்.கதிரவேற்பிள்ளை, விக்னவேணி செல்வநாதன், சி.அனுஷ்யந்தன், எஸ்.சண்முகதாஸ், சைவப்புலவர் கலாபூசணம் சு.செல்லத்துரை, ஆகியோர் ஆலோசகர்களாக பங்குகொண்டு **"நீரிழிவு நோய் தொடர்பான சிக்கல்கள்"** என்ற தலைப்பில் கருத்துரை வழங்கினார்கள். நிகழ்ச்சித் தொகுப்பாளராக உளநல ஆலோசகர் திரு.கா.வைத்தீஸ்வரன் அவர்கள் கடமையாற்றினார்.

# கொழும்புத் தமிழ்ச் சங்கம்

## நடாத்தும்

# திருக்குறள் தொடர் சொற்பொழிவு

## நிகழ்த்துபவர் – கம்பவாரிதி இ.ஜெயராஜ்

**இடம் : கொழும்புத் தமிழ்ச் சங்கம் (சங்கரப்பிள்ளை மண்டபம்)**
**காலம் : 26.12.2009 ~ சனிக்கிழமை தொடக்கம்**
**02.01.2010 ~ சனிக்கிழமை வரை மாலை 5.30 மணிக்கு**

விடயம் :

- ஒரு தர்மம்
- ஒரு நூல்
- ஒரு குறள்
- ஒரு பால்
- ஓர் அறம்
- ஓர் இயல்
- ஓர் அதிகாரம்
- ஓர் உரை

## அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

| பேராசிரியர் சோ.சந்திரசேகரம் | மா.கணபதிப்பிள்ளை | ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி |
|---|---|---|
| தலைவர் | கல்விக்குழுச் செயலாளர் | பொதுச்செயலாளர் |

### முதலாம் நாள் நிகழ்வு

விடயம் : ஒரு தர்மம்
காலம் : 26.12.2009 - சனிக்கிழமை மாலை 5.30 மணி
தலைமை : பேராசிரியர் சோ.சந்திரசேகரன்
(தலைவர், கொழும்புத் தமிழ்ச் சங்கம்)
மங்கள விளக்கேற்றல் : தேசமானிய, தேசபந்து திரு.ஏ.எஸ்.பூபாலசிங்கம் ஜே.பி. அவர்களும் துணைவியாரும்
தமிழ் வாழ்த்து : செல்வி பிரசாந்தி இராஜ்குமார், செல்வி பார்க்கவி கபிலதாஸ்
தொடக்கவுரை : திரு.மா.கணபதிப்பிள்ளை
(கல்விக்குழுச் செயலாளர், கொழும்புத் தமிழ்ச் சங்கம்)
தலைமையுரை
தொடர் சொற்பொழிவு
சங்கவாழ்த்திசை

### இரண்டாம் நாள் நிகழ்வு

விடயம் : ஒரு நூல்
காலம் : 27.12.2009 - ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணி
தலைமை : பேராசிரியர் சபா ஜெயராசா
(துணைத் தலைவர், கொழும்புத் தமிழ்ச் சங்கம்)
மங்கள விளக்கேற்றல் : திரு.க.தம்பிராஜா அவர்களும் துணைவியாரும்
(உப தலைவர், உலக சைவப் பேரவை - இலங்கைக் கிளை)
தமிழ் வாழ்த்து : செல்வி கீர்த்தனா சச்சிதானந்தன்
செல்வி கீர்த்தனா மதிவதனன்
தொடக்கவுரை : திருமதி ஜெயந்தி விநோதன்
தலைமையுரை
தொடர் சொற்பொழிவு
சங்கவாழ்த்திசை



### மூன்றாம் நாள் நிகழ்வு

விடயம் : ஒரு குறள்
காலம் : 28.12.2009 - திங்கட்கிழமை மாலை 5.30 மணி
தலைமை : திரு.மு.கதிர்காமநாதன்
(துணைத் தலைவர், கொழும்புத் தமிழ்ச் சங்கம்)
மங்கள விளக்கேற்றல் : திரு.மு.பாலச்சந்திரன் அவர்களும் துணைவியாரும்
(கப்பல் பொறியியலாளர்)
தமிழ் வாழ்த்து : திருமதி சீதாலஷ்மி வசிகரன்
தொடக்கவுரை : திரு.எஸ்.எச்.எம்.ஜமீல்
(முன்னாள் மேலதிக செயலாளர், கலாசார சமய அலுவல்கள் அமைச்சு)
தலைமையுரை
தொடர் சொற்பொழிவு
சங்கவாழ்த்திசை

### நான்காம் நாள் நிகழ்வு

விடயம் : ஒரு பால்
காலம் : 29.12.2009 - செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணி
தலைமை : திருமதி பத்மா சோமகாந்தன்
(துணைத் தலைவர், கொழும்புத் தமிழ்ச் சங்கம்)
மங்கள விளக்கேற்றல் : திரு.சு.பொ.நடராஜா அவர்களும் துணைவியாரும்
(உரிமையாளர், அண்ணா தொழிலகம் - கொழும்பு, யாழ்ப்பாணம்)
தமிழ் வாழ்த்து : செல்வி ஸ்ரீசாரதா சுந்தரேசன்
தொடக்கவுரை : திரு.வீ.ஏ.திருஞானசுந்தரம்
(ஆலோசகர், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்)
தலைமையுரை
தொடர் சொற்பொழிவு
சங்கவாழ்த்திசை

### ஐந்தாம் நாள் நிகழ்வு

விடயம் : ஓர் அறம்
காலம் : 30.12.2009 - புதன்கிழமை மாலை 5.30 மணி
தலைமை : செல்வி சற்சொரூபவதி நாதன்
(ஆட்சிக்குழு உறுப்பினர், கொழும்புத் தமிழ்ச் சங்கம்)
மங்கள விளக்கேற்றல் : திரு.அம்பலவாணர் சர்வானந்தராஜா அவர்களும் துணைவியாரும்
(உரிமையாளர் லக்சுமி பவான் - கொழும்பு, இணைப்பாளர், சமூக பொருளாதார கல்வி கலாசார அபிவிருத்திச் சங்கம் - நயினாதீவு)
தமிழ் வாழ்த்து : செல்வி சௌதாமினி மோகனசுந்தரம்
தொடக்கவுரை : திரு.ஜெ.விஸ்வநாதன்
(மேல்நீதிமன்ற நீதிபதி, வவுனியா)
தலைமையுரை
தொடர் சொற்பொழிவு
சங்கவாழ்த்திசை

## ஆறாம் நாள் நிகழ்வு

| | |
|---|---|
| விடயம் | : ஓர் இயல் |
| காலம் | : 31.12.2009 - வியாழக்கிழமை மாலை 5.30 மணி |
| தலைமை | : திரு.ஆ.குகமூர்த்தி<br>(துணைத் தலைவர், கொழும்புத் தமிழ்ச் சங்கம்) |
| மங்கள விளக்கேற்றல் | : வைத்திய கலாநிதி ச.சிவசுப்பிரமணியம் அவர்களும் துணைவியாரும் |
| தமிழ் வாழ்த்து | : செல்வி றனோசா சந்திரசேகரம்<br>செல்வி நாராஜிணி சுதாகரன்<br>செல்வி டிக்சித்தா பாஸ்கரன்<br>செல்வி ஜர்சனா அருந்தவநாதன் |
| தொடக்கவுரை | : கலாநிதி சி.சிவநிர்த்தானந்தா<br>(பிரதிக் கல்விப் பணிப்பாளர், கல்வித் திணைக்களம் திருகோணமலை) |

தலைமையுரை

தொடர் சொற்பொழிவு

சங்கவாழ்த்திசை

## ஏழாம் நாள் நிகழ்வு

| | |
|---|---|
| விடயம் | : ஓர் அதிகாரம் |
| காலம் | : 01.01.2010 - வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணி |
| தலைமை | : திரு.ஜி.ஈராஜகுலேந்திரா<br>(துணைத் தலைவர் கொழும்புத் தமிழ்ச் சங்கம்) |
| மங்கள விளக்கேற்றல் | : திரு.வேலு சந்திரசேகரம் அவர்களும் துணைவியாரும்<br>(தலைவர், இந்து வர்த்தக சங்கம் - நீர்கொழும்பு) |
| தமிழ் வாழ்த்து | : செல்வி நிரோஜினி மணிமாறன்<br>செல்வி சிலோஜினி மணிமாறன்<br>செல்வி கலைவாணி துரைசாமி<br>செல்வி சஞ்சீவனி பிரபாகர் |
| தொடக்கவுரை | : செல்வி பு.யோ.முருகேசு<br>(அதிபர், முகத்துவாரம் இந்துக் கல்லூரி - கொழும்பு - 15) |

தலைமையுரை

தொடர் சொற்பொழிவு

சங்கவாழ்த்திசை

### பண்டிதர் வகுப்பு

பிரவேச பண்டிதர், பால பண்டிதர் வகுப்புக்கள் விரைவில் ஆரம்பமாக உள்ளன.

செய்திமடல் தொடர்பான மேலதிக தகவல்களுக்கு தொடர்புகொள்ளவும்.

**ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி**
**பொதுச்செயலாளர்**



## எட்டாம் நாள் நிகழ்வு

| | |
|---|---|
| விடயம் | : ஓர் உரை |
| காலம் | : 02.01.2010 - சனிக்கிழமை மாலை 5.30 மணி |
| தலைமை | : பேராசிரியர் சோ.சந்திரசேகரம்<br>(தலைவர், கொழும்புத் தமிழ்ச் சங்கம்) |
| மங்கள விளக்கேற்றல் | : திரு.பெ.விஜயரத்தினம் அவர்களும் துணைவியாரும்<br>(துணைக்காப்பாளர், கொழும்புத் தமிழ்ச் சங்கம்) |
| தமிழ் வாழ்த்து | : திருமதி.ரஜனி சந்திரலிங்கம் |
| தொடக்கவுரை | : திரு.ஏ.ஆர்.சுரேந்திரன்<br>(ஜனாதிபதி சட்டத்தரணி) |

தலைமையுரை

தொடர் சொற்பொழிவு

| | |
|---|---|
| நன்றியுரை | : திரு.ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி<br>(பொதுச் செயலாளர், கொழும்புத் தமிழ்ச் சங்கம்) |

சங்கவாழ்த்திசை

## கல்விப் பணி

25 வளவாளர்களுடன் அவர்கள் கற்பிப்பதற்கு அவசியமான பாடக்குறிப்புகள் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தால் அச்சிடப்பட்டு தொடர்ச்சியாக மூன்று நாட்கள் வகுப்புக்கள் நடத்தப்பட்டன. அத்துடன் அருணாச்சலம் நலன்புரி நிலைய மாணவர்களுடைய உடனடித் தேவையை நிறைவேற்றுவதற்காக ஒலிபெருக்கி கருவிகள் அன்பளிப்பு செய்யப்பட்டன. இவ்வொலிபெருக்கி கருவிகள் மாங்குளம் மகாவித்தியாலய அதிபரால் பெறுப்பேற்றக்கப்பட்டன.

மேலும் தயாரிக்கப்பட்ட குறிப்புகளின் உதவியுடன் முதன்மை ஆசிரியர்களால் ஒழுங்குபடுத்தப்பட்டு இரத்மலானை இந்துக் கல்லூரிக்கு கொண்டு வரப்பட்ட புதிய மாணவர்களுக்கு தொடர்ச்சியாக வகுப்புக்கள் நடத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

மேலும் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களின் நலன் கருதி இலங்கை ஒப்புரவாக்கல் மற்றும் மீளஉருவாக்கல் நிறுவனமும் கொழும்புத் தமிழ்ச் சங்கமும் இணைந்து மீள் குடியேற்றப்பட்ட பகுதியில் உள்ள பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் நலன் கருதி உடன் அருந்துவதற்கு தயாராக உள்ள பத்தாயிரம் நெஸ்ரமோல்ட் பால் பைக்கற்றுகளை அந்தந்த கல்விப் பணிப்பாளர் ஊடாக வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நலன்புரி நிலையத்தில் உள்ள உயர்தர மாணவர்களுக்கு நடத்தப்பட்ட வகுப்புக்களின் பலனாக பெருமளவு மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதியைப் பெறக்கூடிய நிலைக்கு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

திரு/திருமதி/செல்வி ................................................................................ அவர்கட்கு

................................................................................

................................................................................

................................................................................

கொழும்புத் தமிழ்ச் சங்கம்,
இல.07, 57ஆவது ஒழுங்கை,
கொழும்பு 06.